# விதையிடும் இயந்திரத்தைப் பயன்படுத்தி நெற் செய்கையின் உற்பத்தித்திறனை அதிகரிப்போம்

யாழ் மாவட்டத்தில் நெற் செய்கையானது மானாவாரியாக இடம்பெறுகிறது. 2019/20 கால போகத்தில் 10,857 ஹெக்ரேயரில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டது. 2020/21 காலபோகத்தில் 11,857 ஹெக்ரேயர் விஸ்தீரணத்தில் நெற் செய்கை மேற்கொள்ளப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கடந்த காலபோகங்களில், நெற்செய்கையில் களைகள் மற்றும் நோய் பீடைத் தாக்கத்தினால் உற்பத்தி இழப்பு எற்பட்டதுடன் உற்பத்தி செலவும் அதிகரித்துக் காணப்பட்டது.

விவசாயிகள், சாதாரணமாக ஒரு ஏக்கருக்கு மூன்று புசலுக்கும் கூடியளவு விதை நெல்லை வீசி விதைப்பு மூலம் விதைக்கிறார்கள். இதனால் சீரற்ற பயிரடர்த்தி, கூடியளவான விதை நெல்லை விதைப்பதனால் விதை நெல்லுக்காக கூடியளவு பணச் செலவு, பயிர்களில் குறைந்த எண்ணிக்கையான மட்டம் வெடித்தல் மற்றும் திரட்சியற்ற மணிகள் தோன்றுதல், களைகளின் பெருக்கம், நோய், பீடைத் தாக்கம், பயிர் வேர்களுக்கான காற்றோட்டக் குறைவு போன்ற பிரச்சினைகளை நெற்செய்கையில் எதிர்நோக்குகின்றனர்.

இவற்றினைக் கருத்திற் கொண்டு, விவசாயத் திணைக்களத்தினால், நான்கு சில்லு உழவு இயந்திரத்தில் பொருத்தி இயக்கப்படும் வரிசையில் விதையிடும் இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டு, தற்போது விவசாயிகளால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. விவசாயத் திணைக்களத்தின் சிபாரிசின் படி, ஒரு ஏக்கருக்கு 03 புசல் விதை நெல் போதுமானதாகும். எனினும், இவ் விதையிடும் இயந்திரத்தைப் பயன்படுத்துவதன் மூலம், ஒரு ஏக்கருக்கு ஒன்றே கால் புசல் முதல் ஒன்றரைப் புசல் விதை நெல் போதுமானதாகும்.

இவ் விதையிடும் இயந்திரத்தைப் பயன்படுத்தும் போது, வயல் நிலமானது நன்கு பண்படுத்தப் பட்டிருப்பதையும், மண் துார்வையானதாகக் காணப்படுவதனையும், களைகளற்ற நிலமாகக் காணப்படுவதையும், சுத்திகரிக்கப்பட்ட விதை நெல்லினைப் பயன்படுத்தப் படுவதனையும், மண் புழுதித்தன்மையாகவம் குறிப்பாக மண் ஈரத்தன்மையற்றதாகக் காணப்படுவதையும், பருவமழை ஆரம்பிப்பதற்கு முன்னராக இவ் விதையிடும் இயந்திரத்தைப் பயன்படுத்துவதையும் உறுதி செய்ய வேண்டும்.

வரிசை விதைப்பினால் விதைகளை சரியான ஆழத்தில் விதைக்க முடிவதுடன், சீரான பயிரடர்த்தியும் பேணப்படும். கூடுதலான, ஆரோக்கியமான மட்டங்கள், திரட்சியான மணிகள் உருவாகும். நெல் வர்க்கத்தின் இனத்தூய்மையைப் பேணமுடியும். பயிர்களுக்கு போதியளவு காற்றோட்டம் கிடைக்கும். போதியளவு சூரிய ஒளி கிடைக்கும், நோய், பீடை முகாமைத்துவம் மற்றும் பீடை நாசினி , பங்கசு நாசினி விசுறல் இலகுவாகும். நெற் பயிர்கள் சரியும் தன்மை குறையும். இயந்திரங்களைப் பயன்படுத்தி அறுவடையை இலகுவாக மேற்கொள்ளலாம்.

காலபோகம் 2020/2021 இல் யாழ்ப்பாணத்திலுள்ள இளம் விவசாயிகள் கழக உறுப்பினர்களினால் நெல் வரிசையிலிடும் இயந்திரத்தைப் பயன்படுத்தி சண்டிலிப்பாய், உடுவில், கைதடி, புலோலி விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் வரிசை விதைப்பானது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது

இச் சேவையினைப் பெறுவதற்கு தங்கள் பிரிவிலுள்ள விவசாயப் போதனாசியர்களை அல்லது பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பணிமனையுடன் 021-2222175 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகத் தொடர்பு கொள்ளமுடியும். இவ் இயந்திரத்தைப் பயன்படுத்தி நெற் செய்கையை இலாபகரமான பயிர்ச்செய்கையாக மாற்றமுடியும். நெல் அறுவடையின் பின் வயல் நிலங்களில் உப உணவுப் பயிர்களான பயறு, உழுந்து, கௌபி, நிலக்கடலை. சோளம் விதைகளை இவ் இயந்திரத்தைப் பயன்படுத்தி வரிசையில் விதையிடமுடியும்.

ச.பாலகிருஷ்ணன்
பாடவிதான உத்தியோகத்தர்
(பயிர் பாதுகாப்பு/நெல்)

திருமதி.அ.சிறீரங்கன்
பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்